செ.வெ.எண்:39 நாள்:16.06.2021

## கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியராக டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் பொறுப்பேற்பு.

*******************************************

டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தின் 182வது மாவட்ட ஆட்சித்தலைவராக இன்று(16.06.2021) காலை 10.30 மணியளவில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியராக இன்று பொறுப்பேற்றுக்கொண்ட டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவமும், தில்லி தேசிய சட்ட பல்கலை கழகத்தில் நகர சுற்றுச் சூழல் மேலாண்மை மற்றும் சட்டத்தில் முதுகலை பட்டய படிப்பும் படித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு இந்திய குடிமைப் பணிக்கான போட்டித்தேர்வில் தேர்ச்சி பெற்று பரமக்குடியில் சார்-ஆட்சியர், ராமநாதபுரத்தில் கூடுதல் ஆட்சியர், மீன் வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண் இயக்குநர், தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் என பல்வேறு இடங்களில் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் பணியாற்றியுள்ளார்.

மேலும் நில மேலாண்மை, பேரிடர் மேலாண்மை, திட்டங்கள் மேலாண்மை, மின்-ஆளுமை, பொதுத் துறை நிறுவன மேலாண்மை மற்றும் வளர்ச்சி, பொது சுகாதாரம், ஊரக வாழ்வாதாரம், அரசு பங்கேற்பு மற்றும் கலாச்சார சுற்றுலா போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கும் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (16.06.2021) கோயம்புத்தூர் மாவட்டத்தின் 182வது மாவட்ட ஆட்சித்தலைவராக பெறுப்பேற்றுக் கொண்டார்.

**தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, வரும் நாட்களில் தொற்றின் விகிதத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளினால், கடந்த மாதங்களில் இருந்த கொரோனா தொற்றுப் பாதிப்பைவிட தற்போது தொற்று பாதிப்பு வெகுவாக குறைந்துள்ளது. இதற்கு கோயம்புத்தூர் மாவட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பும் மிக முக்கிய காரணமாகும்.

கொரோனா தொற்றை முழுவதுமாக நம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்து ஒழிப்புதற்கு பொதுமக்கள் முழுஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**